# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,881 — 1969 නොවැම්බර් 21 වැනි සිකුරාදා — 1969.11.21

14,881 ஆம் இலக்கம் — 1969 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. — | 1159 | ஆயவிற்பனைவும், குத்தகை விற்பனைவும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. — | 1162 | அந்நிய குடியுரிமை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 1162 | ஏல விற்பனைகள் — .. .. | — |
| பொருட்கள் விற்பனைவும் பிறவும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


### பதவிகள் — வெற்றிடம்

**" இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "**

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும மூறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள், அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(1) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால், அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கெனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(1) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.*

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறனடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள்; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்ச வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், நிலக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, கரைப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (சுமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருந்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையும் தேதியன்றே அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 திருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவும் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரைவிலக்கணம்.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதில் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

எனது இல. எல்சபீ/எம்/143

## காணிக் கொமிஷனர் திணைக்களம்

### சுவட்டுப்படி வரைபவர் பதவி

காணிக் கொமிஷனர் திணைக்களத்தில் சுவட்டுப்படி வரைபவர் பதவி ஒன்றுக்கான விண்ணப்பப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. **சம்பள அளவுத் திட்டமும், நியமன நியதிகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரிமை உடையதுமாகும். இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருடத்திற்கு ரூபா 888—18 × 72—2,184 (1969.9.15 ந் திகதி வெளியிடப்பட்ட 770 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திரட்டிய சம்பள அளவுத் திட்டம் ரூபா 2,910—18 × 90—4,530) ஆகும். ரூபா 1,608 (3,810 திரட்டிய சம்பள அளவு) க்கு முன் வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை உண்டு.

3. **கல்வித் தகைமைகளும் மற்றும் தகைமைகளும்.**—

(அ) விண்ணப்பதாரர் வம்சாவழியாகவோ அல்லது பதிவு செய்யப்பட்டதனாலோ இலங்கைப் பிரஜையாக இருத்தல் வெண்டும். அவர்கள் 1969 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 25 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தரம் உட்பட சித்தி எய்தியிருத்தல் வேண்டும்.

அல்லது

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை (சாதாரண தரம்)யில் சித்திரம் உட்பட ஆறு பாடங்களில் ஒரே முறையில், அல்லது இருமுறையாயின் ஒரே முறையில் ஐந்து பாடங்களுக்குக் குறையாது சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

(இ) படம் வரைதல் பிரதி எடுத்தல் முதலானவைகளில் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்.**—

(அ தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் நியமிக்கப்பட்டதும் நில அளவைத் தலைமை அதிபதி அலுவலகத்தில் ஒருமாத காலத்திற்கு பயிற்சி பெறும்படி கேட்கப்படுவர்.

(ஆ) நியமனம் 3 வருடகால தகுதிகாண் நிலையைக் கொண்டதாகும்.

(இ) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் திணைக்களத் தலைவர் முடிவு செய்வதன் பிரகாரம் பிணைப்பணம் செலுத்தக் கேட்கப்படுவர்.

(ஈ) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் இத்தீவின் எப்பகுதியிலும் கடமை செய்யுமாறு கேட்கப்படுவர்.

5. விண்ணப்பங்கள் அபேட்சகர்களின் சமீபகால நல்லொழுக்கம், வேலைத் திறன் பற்றிய சான்றிதழ்கள் இரண்டுடனும் பிறப்பு அத்தாட்சிப்

பத்திரத்திரத்தினதும் கல்வித் தராதரப் பத்திரத்தினதும் பிரதிகளுடன் இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அபேட்சகர்களினால் கீழே தரப்பட்ட மாதிரி விண்ணப்பப் பத்திரப் பிரகாரம் தயாரிக்கப்பட்டு 1969 டிசெம்பர் மாதம் 15 ந் திகதியோ அல்லது அதற்கு முன்பாகவோ "யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்ப்பாணக் கச்சேரி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "சுவட்டுப்படி வரைபவர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்பட்டு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமை அறிவிக்கப்பட மாட்டாது.

6. மேலும் இது சம்பந்தமான அரசாங்க வர்த்தமானியின் I ம் பகுதியில் (II) ம் தொகுதியில் அரசாங்க சேவை பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் சம்பந்தமாகப் பிரசுரிக்கப்படும் விளம்பரத்தின் மீது அபேட்சகர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

ஜே. எம். சபாரத்தினம்,
மேலதிக அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

1969 நவம்பர் மாதம் 12 ந் திகதி.
யாழ்ப்பாணக் கச்சேரி,

## விண்ணப்பப் பத்திரம்

### சுவட்டுப்படி வரைபவர் பதவி

1. முழுப் பெயர், இனம், தபால் விலாசம் (தெளிவான எழுத்துக்களில்) :—
2. பிறந்த திகதியும் 1969.12.15 ல் வயதும் (பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்) :—
3. பிறந்த இடம்* :—
   (அ) விண்ணப்பதாரர் :————.
   (ஆ) விண்ணப்பதாரரின் தந்தை :————.
   (இ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பாட்டன் :————.
   (ஈ) விண்ணப்பதாரரின் தந்தைவழிப்பூட்டன் :————.
4. கல்வித் தகைமைகள் (சித்தியெய்திய திகதிகளுடன்) :————.
5. பாடசாலையிலிருந்து விலகிய தினத்திலிருந்து வகித்துள்ள பதவிகள் சம்பள விபரத்துடன் :————.
6. நற்சாட்சிப் பத்திரங்களின் எண்ணிக்கை :————.
7. நற்சாட்சிப் பத்திரம் வழங்கிய இருவரின் பெயர்கள், முகவரிகள், தொழில்கள் :————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

* **குறிப்பு.**—விண்ணப்பதாரரும் அவரின் தகப்பனும் இலங்கையில் பிறந்திருப்பின் (அ), (ஆ) மட்டும் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் அல்லது அவரின் தகப்பன் அல்லது இருவரும் இலங்கைக்கு வெளியே பிறந்திருப்பின் (அ), (ஆ), (இ), (ஈ) யாவும் நிரப்பப்படல் வேண்டும்.

11–654—21.11.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,881

---

## இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகப் பரீட்சைக்குப் பயிற்சியளிப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வசதி அளித்தல்

தத்துவக் கணக்காரளராகத் தகைமை பெறும் பொருட்டு இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகத்தில் பயிற்சி பெறுவதற்கு இவ்வறிவித்தலின் 2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்களும் தமது நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டவருமான அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவழைக்கப்படுகின்றன. 1970 சனவரி 1 ஆந் தேதியில் பயிற்சிநெறி தொடங்குகின்றது.

2. **தேவைப்படும் தகைமைகள்.**—(அ) வயது 1970 சனவரி 1 ஆம் தேதியில் 35 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வித் தகைமைகள்.**—பின்வரும் கல்வித் தகைமைகளில் ஒன்றையேனும் உடையவராய் இருத்தல் வேண்டும் :—

(i) கழகத்தினவை அங்கீகரித்த பல்கலைக்கழகமொன்றின் பட்டக் கல்வி ;

(ii) இலங்கை உயர் பாடசாலைத் தராதரப் பத்திரம் ;

(iii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல் டிப்புளோமா ;

(iv) இலண்டன் பல்கலைக் கழக அல்லது இலங்கை பொ. க. த. பரீட்சையில் (உயர்தரம்) இரு தடவைகளுக்கு மேற்படாமல் 4 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ; இவற்றுள் ஒரு பாடம் கணிதமாகவிருத்தல் வேண்டும். அல்லது இலண்டன் பல்கலைக்கழக அல்லது இலங்கை பொ. க. த. பரீட்சையில் (உயர்தரம்) இரு தடைவைகளுக்கு மேற்படாமல் 4 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன், இலண்டன் பல்கலைக்கழக அல்லது இலங்கை பொ. க. த. பரீட்சையில் (சாதாரண தரம்) கணிதத்தில் அல்லது எண் கணிதத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) அரசாங்கத்தின் கீழ் சேவை—

(i) அரசாங்கக் கணக்காளர் சேவையில் அல்லது கணக்குப் பரிசோதனைச் சேவையில் ஓர் உறுப்பினராதல் வேண்டும் ; அல்லது

(ii) 1970 சனவரி 1 ஆந் தேதியில் குறைந்தது ஐந்தாண்டுச் சேவையுடன் கழகத்தினவை அங்கீகரித்த பல்கலைக் கழகத்துப் பட்டதாரியாயிருத்தல் வேண்டும் ; அல்லது

(iii) 1970 சனவரி 1 ஆந் தேதியில் குறைந்தது ஐந்தாண்டுச் சேவையுடன் இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் கணக்கியல் டிப்புளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

கணக்கு வேலைகளில் அல்லது கணக்குப் பரிசோதனை வேலையில் அல்லது இவ்விரண்டிலும் முன் அனுபவம் உள்ளோர்க்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

3. **தெரிவு முறை.**—முறையாக நியமிக்கப்பட்ட தெரிவுச் சபையொன்றினால் நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படும். நேர்முகப் பரீட்சையின் இடமும் நேரமும் விண்ணப்பிப்போர்க்கு அறிவிக்கப்படும்.

4. **தெரிவு செய்யப்படவுள்ள பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை.**—வசதிக்கேற்ப, 5 பரீட்சார்த்திகளுக்கு மேற்படாமற் பயிற்சி பெறத் தெரிவு செய்யப்படுவர்.

5. **பயிற்சி.**—இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகத்தால் பொருந்திப் பயிலுவதற்கு ஒழுங்கு செய்யப்படும். பொருந்திப் பயிலும் காலம் பின்வருமாறு :—

(i) கழகத்தினவை அங்கீகரித்த கல்கலைக்கழகப் பட்டதாரிகள் விடயத்தில் 3 ஆண்டு ;

(ii) பிறவிடயங்கள் எவற்றிலும், 4 ஆண்டு.

6. **புலமைப்பரிசில் நிபந்தனைகள்.**—(அ) புலமைப் பரிசில் பெறத் தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தி ஒருவர், பயிற்சி நெறியை வெற்றிகரமாய் முடித்த பின்னர் பத்து ஆண்டுக் காலத்துக்கு அரசாங்க கணக்காளர் சேவையில் அல்லது கணக்குப் பரிசோதனைச் சேவையில் (அவ்வாறு வேண்டப்பட்டால்) சேவை செய்ய ஒப்புக்கொண்டு ஓர் உடன்படிக்கை செய்யுமாறு வேண்டப்படுவர்.

(ஆ) கழகத்திற்குக் கட்ட வேண்டிய படிப்புக்குக் கட்டணம், பரீட்சைக் கட்டணம், போதனை நெறிச் செலவுகள், கடிதத் தோடர்பு நெறிச் செலவுகள் ஆகியன அரசாங்கத்தினால் செலுத்தப்படும். பயிற்சியோடு தொடர்பான பிற இடைநேர் செலவுகளைப் பரீட்சார்த்தியே பொறுத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திக்கு ஈராண்டு முழு வேதன விடுதலையும் பயிற்சியின் மிகுதிக் காலத்துற்கு அரை வேதன விடுதலையும் கொடுக்கப்படும்.

(இ) பின்வரும் நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றின் கீழ் அல்லது பலவற்றின் கீழ் புலமைப்பிரிசில் நிறுத்தப்படுதற்கேதுவாகும் :—

(i) ஒரு பரீட்சார்த்தி, தொடக்க விரிவுதுரைநெறிகளையும் பயிற்சிகளையும் தத்துவக் கணக்காளர் கழக மன்றத்தின் திருப்திக்கேற்ப முடிக்கத் தவறினால், அத்தகைய சந்தர்ப்பத்தில் பொருந்திப் பயில அனுமதிக்கப்பட மாட்டார்.

(ii) இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகப் பிரமாணங்களின்படி பொருந்திப் பயிலும் காலம் முடிவடைகையில் ;

(iii) இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகப் பிரமாணங்களின்படி இடைக் காலப் பரீட்சையை, அப் பரீட்சை எடுக்கத் தகுதி பெற்ற ஓராண்டுக்காலத்துள் வெற்றிகரமாய் முடிக்கத் தவறினால் ;

(iv) தத்துவத் கணக்காளர் கழக (இல. 2) பிரமாணங்கள், 1960 என்பதன் 28 ஆம் பிரமாண ஏற்பாடுகளின் கீழ் குறித்த கழகம் பொருந்திப் பயிலும் காலத்தை நிறுத்தினால் ;

(v) குறித்த கழகத்தின் 15 (2) ஆம் பிரமாணத்தின் பிரகாரம் குறித்த பரீட்சார்த்தி திருத்திகரமாகக் காணப்படாவிடின்.

(ஈ) (i) ஆம் பிரிவின் கீழ் ஒரு பரீட்சார்த்தி பொருந்திப் பயில் அனுமதிக்கப்படாவிடின் அல்லது மேலே (iii) (iv) அல்லது (v) ஆம் பிரிவின் கீழ் ஒரு பரீட்சார்த்தியின் பொருந்திப் பயிலல் நெறி நிறுத்தப்பட்டால், அன்னாரின் புலமைப்பரிசில் நிராகரிக்கப்படும் ; அவரின் புலமைப் பரிசில் நிராகரிக்கப்பட்ட தேதிவரை அவரது பயிற்சிகாரணமாய் அரசாங்கத்

துக்கு ஏற்பட்ட செலவுகள் யாவும், பயிற்சிக் காலத்தில் அவருக்குச் செலுத்தப்பட்ட சம்பளமும் படிகளும் அவரால் அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுக்கப்படல்வேண்டும்.

7. விண்ணப்பங்கள் யாவும், இத்துடன் இணைத்துள்ள படிவத்தில் முற்றாக நிரப்பப்பட்டு, திறைசேரியின் மேலதிகச் செயலாளர், (கிளை " ஜி "), பொதுத்திறைசேரி, கொழும்பு என்னும் முகவரியை 1969 நவம்பர் 25 ஆந் தேதியன்றோ அதன் முன்னரோ சென்றடையுமாறு அனுப்பப்படல் வேண்டும்.

8. விண்ணப்பக்காரர் சேவை செய்யுந் திணைக்களத் தலைவர்க்கூடாக எல்லா விண்ணப்பங்களும் அனுப்பப்படல் வேண்டும் எனினும் விண்ணப் பப் பத்திரத்தின் பிரதி திறைசேரிக்கு நேராக அனுப்பப்படல்வேண டும்.

9. எல்லா விண்ணப்பங்களையும் பெற்றுக் கொண்டமை ஒப்புக்கொள் ளப்படும். எந்த விண்ணப்பக்காரரும் முடிவுத் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் ஒப்புக்கோடல் பெருவிடின் அது பற்றித் திறைசேரியின் மேலதிகப் பிரதிச் செயலாளருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

பி. டி. உடுவெல,
திறைசேரி மேலதிகப் பிரதிச் செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு, 1969 ந் ஆண்டு நவம்பர் மீ 11 ந் வ.

958/1/166 (ஜி) XIII

### 7 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவம்

**இலங்கைத் தத்துவக் கணக்காளர் கழகப் பரீட்சைகளுக்குப் பயிற்சி பெறுவதற்கு அரசாங்க உத்தியோகத்தகளுக்குப் பயிற்சி வசதி அளித்தல்**

1. முழுப் பெயர் :————.
   (அ) குடும்பப் பெயர் :————.
   (ஆ) பிற பெயர்கள் :————.
2. அஞ்சல் முகவரி :————.
3. பிறந்த தேதி :————.
4. கல்வித் தகைமைகள் :————.
5. நியமனம் பற்றிய விவரங்கள் :—
   (அ) திணைக்களம் :————.
   (ஆ) தற்போதைய பதவி :————.
   (இ) நிரந்தரச் சேவையில் முதல்நியமித்த தேதி :————.
   (ஈ) வகித்த பிற பதவிகள் :————.
   (உ) தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளாராவென் பது :————.
   (ஊ) நிரந்தரச் சேவைக் காலம் :————.
6. விசேட உரிமைக் கோரிக்கைகள் எவையேனும் பற்றிய விவரங்கள் ————.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

தேதி :————.

திணைக்களத் தலைவர் விதப்புரைகள் (விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்களே அனுப்பும் போது 3, 5 ஆம் கூடுகளிலுள்ள விவரங்கள் சரி யானவையோவென அத்தாட்சிப்படுத்துவதுடன் விண்ணப்பக்காரரின் வேலையும் நடத்தையும் திருத்திகரமானவையாவெனவும் கூறுதல் வேண்டும்).

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப் பெயரும்.

தேதி :—

11—626—21.11.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,881

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### " மை லவ் " மோட்டார்ப் படகு விற்பனை

மேலே சொல்லப்பட்ட விடயம் குறித்து 14,876 ம் இலக்க 17.10.1969 ம் திகதி இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I தொகுதி (II) ல் வெளிவந்த விளம்பரத்தில் கொடுக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 27.12.1969 வரை நீடிக்கப்பட்டுள்ளது. 27.12.1969 ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரப் படிவங்கள் 20.12.1969 ம் திகதி வரையும் கப்பற் சேவைத் தலைவர் அலுவலகத் தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. ஈ. பண்டிதரட்ன,
கப்பற் சேத பரிபாலன அதிகாரி.

வர்த்தக கப்பற் சேவைத் திணைக்களம்,
எலிசபெத் இராணி இறங்கு துறை,
கொழும்பு 1.

11—627—21.11.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,881.

## கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

### கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

**26.2.69 இல் முடிவடைந்த கடதாசி மற்றும் கடதாசி அட்டைகளுக்கான கேள்விப்பத்திர முடிபுகள்**

| விடய இல. | விபரம் | கேள்விப்பத்திர காரரின் எண்ணிக்கை | சித்தியடைந்த கேள்விப்பத்திரகாரர் | கட்டளையிடப்பட்ட தொகை | விலை கொ. வி. மற்றும் க. கே. நீ/தொன் ஒன்றிற்கு ரூ. ச. | எந்நாட்டின் உற்பத்தி |
|---|---|---|---|---|---|---|
| 1. | டபிள்சயிடட் றீயல் சுப்பயின் லஸ்ரற் வைற் ஆற் | | | | | |
| | (அ) 20″ × 30″/105 ஜிஎஸ்எம்/45ரு | 34 | கட்டளையிடப்படவில்லை | — | — | — |
| | (ஆ) 23″ × 36″/136 ஜிஎஸ்எம்/80ரு | 37 | ஷை | — | — | — |
| | (இ) 23″ × 36″/102 ஜிஎஸ்எம்/60ரு | 35 | ஷை | — | — | — |
| 2. | பியுவ காட்றிஜ் வைற் | | | | | |
| | (அ) 23″ × 36″/102 ஜிஎஸ்எம்/60ரு | 27 | ஷை | — | — | — |
| | பிளாக் | | | | | |
| | (ஆ) 29″ × 45″/81 ஜிஎஸ்எம்/75ரு | 10 | ஷை | — | — | — |
| 2. | புளு அசுறலெயிற் லெட்ஜர் | | | | | |
| | (அ) 17″ × 27″/87 ஜிஎஸ்எம்/28ரு | 38 | ஷை | — | — | — |
| | (ஆ) 17″ × 27″/98 ஜிஎஸ்எம்/32ரு | 39 | ஷை | — | — | — |
| 4. | பெஸ்ட் எயர்மெயில் கடதாசி | | | | | |
| | (அ) அனியன் ஸ்கின் வைற் 18″ × 23″ /27 ஜிஎஸ்எம்/18ரு | 15 | மெசர்ஸ் டபிள்யூ. ஏ. பிறிற்சே அன் கோ. மே. ஜெர்மனி | 3 நீ/தொன் | 4,390 0 | மே. ஜெர்மனி |
| | (ஆ) எயர்மெயில் பாங் வைற் 18″ × 23″ /27 ஜிஎஸ்எம்/8ரு | 6 | மெசர்ஸ் லிபாட் அன் சிமித்ஸ் லிமிடெட், ஐ. இ. | 2 நீ/தொன் | 3,427 31 | சுவீடன் |
| | (இ) எயர்மெயில் புளு 18″ × 23″/27 ஜிஎஸ்எம்/8ரு | 6 | மெசர்ஸ் லிபாட் அன் ஸ்மித்ஸ் லிமிடெட், ஐ. இ | 2 நீ/தொன் | 3,653 0 | சுவீடன் |

| விடய இல. | விபரம் | கேள்விப்பத்திர காரரின் எண்ணிக்கை | சித்தியடைந்த கேள்விப்பத்திரக்காரர் | கட்டளையிடப்பட்ட தொகை | விலை கொ. வி. மற்றும் க. கே. நீ/ தொன் ஒன்றிற்கு | எந்நாட்டின் உற்பத்தி |
|---|---|---|---|---|---|---|
| 5 | **மனிபோல்ட் பாங்** | | | | ரூ. ச. | |
| | (அ) 23″ × 36″/31 ஜிஎஸ்எம்/18ரு | 37 | மெசர்ஸ் ஆன் வின்ஸ்டல், நோர்வே | 100 நீ/தொன் | 2,040 0 | மே. ஜெர்மனி |
| 6 | **மெசின் கிளேஸ் போஸ்ரர் கடதாசி** | | | | | |
| | (அ) 23″ × 36″/48 ஜிஎஸ்எம்/28ரு | 20 | கட்டளையிடப்படவில்லை | — | — | — |
| | (ஆ) 23″ × 36″/54 ஜிஎஸ்எம்/32ரு | 22 | மெசர்ஸ் நிச்சிமென் கொம்பனி லிமிடெட், ஜப்பான் | 100 நீ/தொன் | 1,558 0 | ஜப்பான் |
| 7. | **நீயல் ஆர் போட்** | | | | | |
| | 29″ × 37″/197 ஜிஎஸ்எம்/30ரு | 22 | மெசர்ஸ் எப். ஈ. எக்ஸ்போட் லிமிடெட் ஐ. இ. | 10 நீ/தொன் | 1,936 12 | அவுஸ்திரியா |
| 8. | **இறேபாக்உடைய அன்கோற்ரெட் பொக்ஸ்போட்** | | | | | |
| | (அ) 31″ × 43/250 ஜிஎஸ்எம் | 16 | மெசர்ஸ் நிச்சிமென் கொம்பனி லிமிடெட், ஜப்பான் | 300 நீ/தொன் | 1,018 45 | ஜப்பான் |
| | (ஆ) 31″ × 43/400 ஜிஎஸ்எம் | 22 | டிெ டிெ | 400 நீ/தொன் | 943 99 | ஜப்பான் |
| | (இ) 31″ × 43/450 ஜிஎஸ்எம் | 20 | டிெ டிெ | 50 நீ/தொன் | 943 99 | ஜப்பான் |
| 9. | **ஸ்ரோ போட்** | | | | | |
| | (அ) 25½″ × 30½″/455 ஜிஎஸ்எம் | 14 | மெசர்ஸ் சாள்ஸ் டெல்டபீல்ட், ஐ.இ. | 200 நீ/தொன் | 626 73 | ஒல்லாந்து |
| | (ஆ) 25½″ × 30½″/682 ஜிஎஸ்எம் | 14 | கட்டளையிடப்படவில்லை | — | — | — |
| | (இ) 25½″ × 30½″/910 ஜிஎஸ்எம் | 14 | கட்டளையிடப்படவில்லை | — | — | — |
| | (ஈ) 25½″ × 30½″/1820 ஜிஎஸ்எம் | 14 | மெசர்ஸ் சாள்ஸ் டெல்டபீல்ட், ஐ.இ. | 50 நீ/தொன் | 701.31 | ஒல்லாந்து |
| | (உ) 25½″ × 30½″/2730 ஜிஎஸ்எம் | 14 | டிெ டிெ | 10 நீ/தொன் | 701 31 | ஒல்லாந்து |

பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ், கொழும்பு 2,
1969 ம் ஆண்டு நொவம்பர் மீ 2 ந உ.

11–763—21.11.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,881

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும் அரசாங்க அழுத்தகனை வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

### அட்டவணை—1969

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் | .. | 5.9.69 | வெள்ளி | .. | 29.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 12.9.69 | வெள்ளி | .. | 5.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 19.9.69 | வெள்ளி | .. | 12.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 26.9.69 | வெள்ளி | .. | 19.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்றோபர் | .. | 2.10.69 | வியாழன் | .. | 26.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 9.10.69 | வியாழன் | .. | 2.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | | 17.10.69 | வெள்ளி | .. | 9.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | | 24.10.69 | வெள்ளி | .. | 17.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | | 31.10.69 | வெள்ளி | .. | 24.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| நவெம்பர் | . | 7.11.69 | வெள்ளி | .. | 31.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | | 14.11.69 | வெள்ளி | .. | 6.11.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | | 21.11.69 | வெள்ளி | .. | 14.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 28.11.69 | வெள்ளி | .. | 21.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| திசம்பர் | . | 5.12.69 | வெள்ளி | .. | 28.11.69 | வெள்ளி | பி.ப | 3.30 |
| | | 12.12.69 | வெள்ளி | .. | 4.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | | 19.12.69 | வெள்ளி | .. | 12.12.69 | வெள்ளி | பி.ப | 3.30 |
| | | 26.12.69 | வெள்ளி | .. | 18.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ஆம் ஆண்டு யூன் மீ 14 ஆந் வ

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.